முக்கிய வார்த்தைகள்:
*முன்மாதிரியான / எடுத்துக் காட்டான செயல்கள்*
*குணம் / நடத்தை*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**25 ஜூலை 2025 / 29 முஹர்ரம் ஹிஜிரி 1447**

**முன்மாதிரியான தனிநபராக ஆகுதல்**

**إِنَّ الْحَمْدَ لِلّهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللهِ،ٱتَّقُواٱللهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيْلِ: يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.**

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

நமது உள்ளங்களையும் ஆன்மாக்களையும், ”தக்வா” [இறை பக்தி] மற்றும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை மனப்பூர்வமாக வணங்கி, வழிபடுவதல் ஆகியவற்றின் மூலமாக ஒளிரச் செய்வோமாக! அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக ஆகுவதற்கு நாம் செய்யும் அனைத்து முயற்சிகளிலும் அல்லாஹ் அருள் புரியட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!**

உங்களின் **முன்மாதிரியான** நபர் யார்? என நாம் கேட்கப்படலாம். இந்த கேள்விக்கானப் பதிலை நாம் எளிதில் கூறி விட முடியும். ஆனால்

உங்களை **முன்மாதிரியான** நபர்களாக யார் கருதுகிறார்கள்? என உங்களிடம் கேட்கப்பட்டால் அப்போது உங்கள் பதில் எதுவாக இருக்கும்?

அன்பிற்குரிய சகோதரர்களே! இம்மாதிரியான கேள்வியைப் பற்றிச் சிந்திப்பது ஏன் நமக்கு அவசியம்? என நாம் யோசிக்கலாம். நாம் இதை உணர்கின்றோமோ, இல்லையோ; பல கண்கள் நம்மை உற்று நோக்கிக் கவனித்துக் கொண்டிருக்கின்றன; ஒருவேளை நமது செயல்களையும் அவை பின் தொடரலாம்.

ஒரு தனிநபர், தனது பெற்றோர், உடன் பிறந்த சகோதர, சகோதரிகள், பள்ளித் தோழர்கள் மற்றும் தொழிற்கூடங்களின் சக ஊழியர்கள் ஆகியோரின் குணங்கள் மற்றும் நடத்தைகளைக் கவனித்து, அவற்றைப் பின்பற்ற வாய்ப்புள்ளது. சமூக ஊடகங்களும் சில குறிப்பிட்ட தனிநபர்களின் வாழ்க்கையிலிருந்து அதிகப்படியான உதாரணங்களை நமக்கு வழங்குகின்றன.

உங்களை **முன்மாதிரியான** நபர்கள் எனக் கருதுபவர் யார்? எனும் கேள்வி மிகவும் முக்கியமானதாகும். காரணம், அப்போதுதான், நாம் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு முன்மாதிரியானவர்களாக இருக்கின்றோமா? அல்லது கெட்ட உதாரணமாக இருக்கின்றோமா? என நம்மைப் பற்றி சிந்திக்க நேரிடும்.

**எனது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய ஜமாஅத்தார்களே!**
நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களை மிகச் சிறந்த முன்மாதிரியாக ஏற்றுள்ளோம். அவர்கள் நம்மைப் போல் மனித உருவில் படைக்கப்பட்டார்கள்; நம்மைப் போன்று அவர்களும் மகிழ்ச்சி மற்றும் கவலையை அனுபவித்தார்கள். சிலவேளைகளில், அவர்கள் சிரித்த நிலையில் மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்றால், மற்ற சில வேளைகளில் மனவேதனையுடன் காணப்பட்டார்கள். இருந்த போதிலும், அல்லாஹ்வின் தூதர்[ஸல்] அவர்கள், அனைவருக்கும் முன்மாதிரியாகத்

திகழும் வகையில், அனைத்து சூழ்நிலையிலும் நற்குணத்தையும் நன்னடத்தையையும் வெளிப்படுத்தினார்கள்.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், மற்றவர்களுக்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்வதற்குத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டுமென நமக்கும் நினைவூட்டினார்கள். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் கூறினார்கள்:
”எவரொருவர், ஒரு நற்காரியத்தைச் செய்ய மற்றவருக்கு வழிகாட்டுகிறாரோ, அவ்வாறு வழிகாட்டப்பட்டவர் அந்த நற்காரியத்தைச் செய்யும் போது, அவருக்கு என்ன நன்மை கிடைக்குமோ, அதே அளவு நன்மை வழிகாட்டியவருக்கும் கிடைக்கும்” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் இந்த உபதேசமானது, நன்மைகள் செய்வதைத் துவங்கி வைப்பவர்களாக நாம் ஆகுவதற்கும், வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் மேன்மையை அடைபவர்களாக நாம் ஆகுவதற்கும், அதனைத் தொடர்ந்து, முன்மாதிரியானத் தனிநபர்களாக ஆகுவதற்குமான உணர்வை நம்மில் ஏற்படுத்தட்டுமாக!

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
முன்மாதிரியான தனிநபர்களாக ஆக வேண்டுமென்ற இறைத்தூதர்[ஸல்] அவர்களின் அழைப்புக்குச் செவிசாய்ப்பதற்கு, பின்வரும் சில முயற்சிகளை நாம் செய்வது அவசியமாகும்:

**முதலாவதாக, நாம் மற்றவர்களுக்குச் சிறந்த முன்மாதிரியாகவும் எடுத்துக் காட்டாகவும் அமைந்துள்ளோமா? எனச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு ஆகுவதை நம்மிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.**

அன்பிற்குரிய எனது சகோதரர்களே! நம்மில் ஒவ்வொருவரும் தனக்கென செல்வாக்குள்ள வட்டத்தைப் பெற்றுள்ளோமல்லவா? பள்ளிவாசல், கல்விக்கூடம், தொழிற்கூடம், உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்களுக் கிடையே நமக்கு செல்வாக்குள்ளது. ஏன்? வீட்டில் கூட நமக்கென தனிப்பட்ட

செல்வாக்கு உள்ளது. நமது நடத்தையும் குணமும் நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளன; நமது செல்வாக்கு, மறைமுகமாக, உடன்பாடான அல்லது எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

ஒரு ஓரிறை நம்பிக்கையுள்ள [முஃமின்] மாணவர், மார்க்கத்தின் அழைப்பை ஏற்று, கல்வியைத் தேடுபவராக இருப்பார். கல்வியைக் கற்கும் விஷயத்தில் வெற்றி பெறுவதற்கும், அதனைத் தொடர்ந்து முன்மாதிரியான மாணவராக ஆகுவதற்கும், சக ஊழியர்களிடம் சிறந்த நல்லுணர்வை ஏற்படுத்தக் கூடியவராக ஆகுவதற்கும் ஆர்வத்துடன் முயற்சிப்பவராக இருப்பார்.

ஒரு *முஃமின்* [ஓரிறை நம்பிக்கையாளர்] யாரெனில், அவரது குணமும் நடத்தையும் சிறப்பாக இருக்கும்; அவரது வார்த்தைகள் கண்ணியமானவையாக இருக்கும்; அவருடன் பழகுவதும், கொடுக்கல், வாங்கல் செய்வதும் இலகுவாக இருக்கும். இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்களின் நற்குணம் மற்றும் நன்னடத்தையின் மூலமாகத்தான் இஸ்லாத்தைப் பற்றி மக்கள் ஆரம்ப காலம் முதல் அறிந்து வருகிறார்கள் என்பதை அவர் தெரிந்தவராக இருப்பார்; மார்க்கப் புத்தகங்களில் காணப்படும் விளக்கங்களை விட, அந்நற்குணமும் நன்னடத்தையும் அவருக்கு முன்மாதிரியாக அமைந்திருக்கும். அல்லாஹ்வின் தூதர்[ஸல்] அவர்களின் "சீராஹ்" எனும் வாழ்க்கை வரலாற்றில் இவ்வாறுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறைத்தூதர்[ஸல்] அவர்களின் நன்னடத்தைதான் பின்பற்றுவதற்கு மிகவும் தகுதியானதாகும்.

**இரண்டாவதாக, நமது நல்ல, கெட்ட செயல்களில் ஒவ்வொன்றும் சங்கிலித் தொடரான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் அறிய வேண்டும்.**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "இப்ராஹிம்" எனும் அத்தியாயத்தின் 24-25 வரையிலான வசனங்களில் கூறும் பின்வரும் உதாரணத்தில் நாம் சிந்தனை செய்வோமாக!:

أَلَمْ تَرَ كَيْفَ ضَرَبَ ٱللَّهُ مَثَلًا كَلِمَةً طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ أَصْلُهَا ثَابِتٌ وَفَرْعُهَا فِى ٱلسَّمَآءِ ﴿٢٤﴾

பொருள்: "[நபியே!] நல்ல சொல்லுக்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறுகிறான் என்பதை நீர் கவனிக்கவில்லையா? அது மணம் மிக்க ஒரு நல்ல மரத்தைப் போன்றதாகும்; அதனுடைய வேர்கள் பூமியில் ஆழமாகப் பதிந்ததாகவும், அதன் கிளைகள் வானளாவியும் இருக்கும்"

تُؤْتِىٓ أُكُلَهَا كُلَّ حِينٍۭ بِإِذْنِ رَبِّهَا ۗ وَيَضْرِبُ ٱللَّهُ ٱلْأَمْثَالَ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُونَ ﴿٢٥﴾

பொருள்: "அது தன்னுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு ஒவ்வொரு காலத்திலும் தன்னுடைய கனியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது; மக்கள் நல்லுணர்வு பெற்று, பாடம் பெறுவதற்காக [இத்தகைய] உதாரணங்களை அல்லாஹ் கூறுகிறான்"

நாம் புரியும் ஒவ்வொரு நற்காரியமும் மற்றவர்களின் வாழ்வில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். அன்பான வார்த்தையும், குடும்ப உறுப்பினர்களுடன் அன்பாகப் பழகுவதும் உறவுமுறைகளைப் பலப்படுத்தும். சிலவேளைகளில், முறிந்து போன உறவுகளைக் கூட சரி செய்து விடும். அவ்வாறே, நம்மைப் புண்படுத்தியவரை மன்னித்து விடுவதானது, தொடர்பபடியான வெறுப்பை அழித்து விடும். அதன் மூலம் நாம் அமைதியை ஏற்படுத்துவதில் மற்றவர்களுக்கு முன்மாதியாக அமையலாம்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ்வினால் நமக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்க்கையை, நாம் முன்மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் ஆகுவதற்குப் பயன்படுத்திக்

கொள்ளுங்கள்! நம்மைச் சுற்றியுள்ள மக்களிடம் நற்காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற உணர்வையும், உடன்பாடான மாற்றத்தையும் ஏற்படுத்த முயலுங்கள்; யா அல்லாஹ்! எங்களுக்கு நிலைத்தன்மையையும், மதிநுட்பத்தையும் வழங்கி, அருள் புரிவாயாக! உனது சிறந்த வழிகாட்டுதலைப் பிரதிபலிக்கின்ற, முன்மாதிரியான நடத்தையையும் நற்குணத்தையும் வளர்த்துக் கொள்வதில் நாங்கள் செய்யும் முயற்சியில் எங்களுக்கு தன்னம்பிக்கையை வழங்கி, அருள் புரிவாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.